## <u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S.No.490 /2023 Date : 05.06.2026

பெயர் : எஸ்தர் அருள்மணி பி.வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

1) என்னிடம் காட்டப்படும் நிருபன வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம் அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். அந்த நிருபன வாக்குமூலத்தில் 30.4.2026 அன்று கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தை ஜான்சன் என்பவரிடம் இருந்து தர்மகண் நாடார் என்பவர் கிரயம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தர்மகன் நாடார் கிரயம் பெற்ற கிரையாவணத்தை தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற் சொன்னவாறு எவ்வித கிரைய ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்குக்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அங்கீகரித்துள்ளது என்பதை மறுப்பதாக சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. 2013 ஆம் ஆண்டு ஆலந்தூர் நீதிமன்றத்தில் மின் இணைப்பு வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக எப்போதிலிருந்து எனக்கு மின் இணைப்பு இருந்தது என்றால் எனது தகப்பனார் அந்த சொத்தை கிரையம் ஆகி இருந்தால் அவரது பெயரில் மின் இணைப்பு இருந்தது. 2006 ஆம் ஆண்டு எனது தாயார் தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய பின்பு மின் இணைப்பு கோரி நான் மனு கொடுத்து இருந்தேன் என்றால் இல்லை.

3) தாவா சொத்தானது மெய் கால் புறம்போக்கு வகைப்பாடு நிலம் என்றாலும் ஆனால் நான் தாவா சொத்து கிராம நத்தை வகைப்பாடு என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 2000 ஆண்டில் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்று எனக்கு எனது கணவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் நான் எனது அண்ணனிடமே திரும்பி வந்து விட்டேன் என்றால் இல்லை. திருமணம் முடிந்து எப்போது எனது வீட்டிற்கு மீண்டும் வந்தேன் என்றால் திருமணம் நடைபெற்றதில் இருந்து நான் எனது வீட்டில் தான் வசித்து வந்தேன். எனது கணவர் எங்கு இருந்து வந்தார் என்றால் என்னுடன் தான் இருந்து வந்தார். எப்போது என்னை விட்டு சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தற்போது வரையில் எனது தாயார் எனது பராமரிப்பில் இருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றாலும் எனது தாயார் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் எனது தாயார் 2021 ஆம்

ஆண்டு இறந்துவிட்டார். தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுவதற்கு முன்பாக எனது பெயரில் எவ்வாறு வீட்டு வரி செலுத்தினீர்கள் என்றால் நானும் எனது தாயாரும் ஒரே வீட்டில் வசித்து வந்ததால் எனது தாயாருக்கு வயதாகி விட்டதால் அவரது பெயரில் உள்ள வீட்டு வரி எனது பெயருக்கு மாற்றி கொடுப்பதாக சொல்லி எனது பெயரில் மாற்றி கொடுத்தார். வீட்டு வரி ரசீதை எனது பெயரில் எனது தாயார் மாற்றி கொடுத்தது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேல் சொன்னவாறு எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் புல எண் 305 ஜோடிக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) எனது சகோதரி சலோமி எனது வீட்டு பக்கத்தில் வசித்து வருகிறாரா என்றால் இல்லை அவர் பத்து தெரு தள்ளி வசித்து வருகிறார் அவர் எந்த தெருவில் வசித்து வருகிறார் என்றால் தெரு பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் வாதிக்கும் இடையே நடைபெற்ற பிரச்சனைக்கு காவல் நிலையத்தில் நடைபெற்ற சமாதானத்தில் எனது சகோதரி சலோமி எனது வீட்டு பக்கத்தில் வசித்து வருவதாக சொல்லி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சலோமி என்பவர் வசித்து வரும் வீட்டு எண் 9 என்றாலும் அந்த வீடு புல எண் அமைந்துள்ளது என்றாலும் அந்த வீட்டின் புல எண் மற்றும் வீட்டு எண் தவறாக பயன்படுத்தி தாவா சொத்திற்கு நான் ஆவணம் ஜோடித்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு எனது பெயரில் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு ஆகியவை ஆவணங்கள் சரிபார்ப்பு பின்னிட்டு எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டதாக குறிப்பிட்ட நிலையில் எந்த ஆவணம் சரிபார்க்கப்பட்டது என்றால் செட்டில்மெண்ட் ஆவணமாகும்.

6) அந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் 2006 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2006 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு தான் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு ஏற்பட்டிருக்கும் என்றாலும் அதற்கு முன்பாக நான் வீட்டு வரி செலுத்தியதாக சொல்லப்படும் ஆவணங்களானது மோசடியானது என்றால் சரியல்ல. இவ் வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வீட்டு மனை ஒப்படைவு நமுனா 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது என்றால் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. நான் அந்த ஒப்படைவு நமுனா வை போலியாக தயார் செய்து உள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எனது பெயரில் 2010 ஆம் ஆண்டு நில ஒப்படைவு ஆணை வழங்கப்பட்டதாக சொல்லி உள்ள நிலையில் தாவா சொத்திற்கு 2009 ஆம் ஆண்டு வாதியின் மனைவி பெயரில் பட்டா கொடுத்து இருக்க முடியாது என்றாலும் நான் தவறாக பட்டா கொடுத்துள்ளது என்றும் அந்த பட்டாவின் அடிப்படையில் தவறாக தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல.

7) வாதி சாலமன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் நான் அத்துமீறி நுழைந்து பிரச்சனை செய்தால் என் மீது சங்கர் நகர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தர்ம கண் நாடார் எப்போது இறந்தார் என்றால் அவர் எப்போது இறந்தார் என்று தெரியவில்லை ஆனால் அவரது இறப்பு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணமானது எனது தகப்பனார் வரி செலுத்தி உள்ளதாக தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 25 ஆவணமானது பிச்சையம்மாள் என்பவர் வரி செலுத்தியதாக தாக்கல் செய்த ஆவணம் என்றால்

சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணமானது எனது பெயரில் மரியன் தெருவில் உள்ள இடத்திற்கு வரி செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணமானது அனகாபுத்தூர் மரியன் தெருவில் உள்ள இடத்திற்கு தர்ம கண்ணாடார் 2008 ஆம் ஆண்டு வரி செலுத்தியதாக தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரிதான்.

8) பி.வா.சா.ஆ.11 ஆவணமானது எனது தகப்பனார் 10.06.1995 அன்று இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் 1995 ஆம் ஆண்டு காலமான பின்னிட்டு 2004 ஆம் ஆண்டில் நான் வீட்டு வரி செலுத்தியதாகும் அதன் பின்னிட்டு 2001 ஆம் ஆண்டு எனது தாயார் பெயரில் வீட்டு வரி செலுத்தியதாகும் அதன் பின்னிட்டு மீண்டும் எனது தகப்பனார் பெயரில் வீட்டு வரி செலுத்தியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தவறானது என்றால் சரியல்ல. எனது தாயார் எனது பெயரில் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் புல எண் 305 ல் அமைந்துள்ள சொத்து இருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் எனது தாயார் தான் அந்த ஆவணத்தை எழுதி கொடுத்தார் ஆனால் அதில் என்ன எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எனது தாயார் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் புல எண் 305 க்கு தானம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

9) பி.வா.சா.ஆ.13 நில ஒப்படைவு உத்தரவு ஆணையானது புல எண் 302 சொத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அது என்ன புல எண்ணிற்கு வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது ஆனால் சொத்தை அளவீடு செய்து அதன் பின்னிட்டு தான் பட்டா கொடுத்தார்கள். எனக்கு உண்மையாக பட்டா வழங்கப்பட்டிருந்தால் தானமாக கிடைக்கப்பெற்ற 900 சதுர அடிக்கு தான் பட்டா வழங்கப்பட்டிருக்கும் என்றாலும் கூடுதல் விசயங்கள் சேர்த்து 1076 சதுரகிரிக்கு பட்டா வழங்கி இருக்க மாட்டார்கள் என்றால் சொத்தை அளவீடு செய்ய வந்தபோது நானும் எனது தாயாரும் வேலைக்கு சென்று இருந்தோம் அதன் பின்னிட்டு அங்கு அருகில் வசித்து வந்த எனது அண்ணன்கள் ஆனா சாலமன் மற்றும் அகஸ்தியர் ஆகியோர்கள் அந்த இடத்தை அளவீடு செய்தார்கள் நானும் எனது தாயார் எங்களது இடத்திற்கு வந்து எங்களுக்கு சொந்தமான ஆவணங்களை காட்டிய பின்னிட்டு எங்களுக்கு அதனை அளவீடு செய்து பட்டா கொடுத்தார்கள்.

10) எனது பெயரில் சட்டப்படியாக பட்டா ஏதும் வழங்கப்படவில்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள பட்டாவானது மோசடியானது என்றால் சரியல்ல. எனது வீட்டு ஏசி ஒயரை பிடுங்கியதாக நான் வாதி மீது புகார் கொடுத்து இருந்தேனா என்றால் இல்லை. இவ் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, இருப்பிட சான்றிதழ் ஆவணங்களானது வாடகை வீட்டில் வசிக்கும் நபர்களுக்கு கொடுக்கப்படும் ஆவணங்கள் என்றாலும் அதன் அடிப்படையில் நான் தாவா சொத்தில் எந்த உரிமையும் கூற முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.21 ஆவணமானது தர்ம கண்ணாடர் என்பவர் எண் 5 மரியன் தெரு காமராஜபுரம் என்ற விலாசத்தில் உள்ள சொத்து இருக்கு வரி செலுத்தியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தானது கதவு எண் 3/9 என்ற விலாசத்தில் உள்ள சொத்து இருக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களானது கதவு எண் 5 என்ற இடத்திற்கு உண்டான ஆவணங்கள் என்றாலும் மேற்படி ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்பந்தமான ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல.

11) பி.வா.சா.ஆ.26 ஆவணமானது நம்பர் 9 மரியன் தெரு அமைந்துள்ள இடத்திற்கு செலுத்திய ரசீது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அது ஆவணம் எப்போது வழங்கப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் வீட்டிற்கு வந்ததா அல்லது நேரடியாக வாங்கப்பட்டதா என்றால் நானே நேரடியாக பஞ்சாயத்தில் சென்று பெற்றுக் கொண்டேன். அதில் குறிப்பிட்டுள்ள வரியை நான்தான் செலுத்தினேனா என்றால் ஆமாம். வரியை இணையதள வாயிலாக செலுத்தினர் அல்லது நேரடியாக செலுத்தினார் என்றால் கவுண்டரில் நேரடியாக செலுத்தினேன். ஆலந்தூர் நீதிமன்றத்தில் இவ்வழக்கின் வாதி தாக்கல் செய்த வழக்கில் எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைப்பட்ச உத்தரவாணையின் அடிப்படையில் நகராட்சியிலிருந்து எனக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் இல்லை. நேரடியாக வந்து என்னை காலி செய்யுமாறு சொன்னார்கள். வாய்மொழியாக சொன்னார்களா என்றால் ஆமாம். நான் நேரடியாக சென்று கேட்ட பின்னிட்டு அறிவிப்பை என்னிடம் கொடுத்தார்கள். அந்த அறிவிப்பில் ஏழு நாட்களுக்குள் பதில் அனுப்புமாறு குறிப்பிட்டதில் நான் எவ்வித பதிலும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல நான் கொடுத்துள்ளேன்.

12) நான் மேற்படி அறிவிப்புக்கு பதில் கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் மேற்படி அறிவிப்புக்கு எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என இவ்வழக்கின் வாதி தகவல் உரிமைச் சட்டத்தில் தகவல் பெற்றுள்ளார் என்றாலும் நான் பதில் அறிவிப்பு கொடுத்ததாக பொய்யாக வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் வழங்கப்பட்ட வரி ரத்து செய்யப்பட்டு விட்டது என்றாலும் அதன் பின்னிட்டு நான் வரி செலுத்தவில்லை என்றால் சரியல்ல 2019 ஆம் ஆண்டு வரையில் நான் வரி செலுத்தியுள்ளேன். நான் எவ்வித வரியும் செலுத்தவில்லை என்றாலும் வரி செலுத்தியதற்கு எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது அண்ணன் அகஸ்டியன் என்பவரும் சேர்ந்து வாதியின் சொத்தை அபகரிக்க முயன்றதால் எனது மீதும் எனது மற்றொரு அண்ணன் மீதும் தனித்தனியாக இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஏழ்மையாக இருந்து வருகிறேன் என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் பெரும் செல்வம் செல்வந்தராக இருந்து வருகிறேன் என்றால் இல்லை அது தவறானது. நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது வழக்கானது போலியாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது**

**மறுவிசாரணை இல்லை.**

**S/d xxxx**

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

**District Munsif-cum Judicial Magistrate,**

**Pallavaram**